
# ஸ்ரீ நடன முத்துமாரி அம்மன்
# தல வரலாறு



ஸ்கந்தபுரம் அருள்மிகு இத்தியடி
ஸ்ரீ நடனமுத்துமாரி அம்மன் தல வரலாறு

சீ.சூரியதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கவி அளவையூர் உயர்திரு . வினாசித்தம்பி
அவர்களால் அம்மனுக்கு திருநாமம்
சூட்டப்பட்ட வேறுபட்ட
வெண்பா

ஞானக்கொழுந்தே நடன முத்து மாரியே
தானம் உயர் ஸ்கந்தபுரம் தற்பரையேன்
வானவரும் வந்து நின் பாதம் தொழும்
வல்லமையே
நின் கருணையும் சாந்தமும் எங்களுக்குத் தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தபுரம் இத்தியடி அருள்மிகு
# ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் தல வரலாறு

சீ. சூரியதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | ஸ்கந்தபுரம் இத்தியடி அருள்மிகு ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் தலவரலாறு |
| எழுதியவர் | : | சீ. சூரியதாசன் B.B.M (Special Management English Medium, Advance Dip.In Manegement. Dip English U.K (London) |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| நிதியுதவி | :- | இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் பரிபாலன சபை |
| முதற்பதிப்பு | :- | 08.05.2015 |
| அச்சுப்பதிப்பு | :- | வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. |
| அட்டை வடிவமைப்பு | :- | வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. |
| படப்பிடிப்பு(அட்டை வடிவமைப்பு) | :- | கிருஷ்ணா வீடியோ ஸ்கந்தபுரம் |
| பக்கங்கள் | :- | 56 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



"குருபிரம்மா குருவிஷ்ணு குருதேவா மஹேஸ்வரா குரு ஷாட்ஷாத் பரப்பிரம்மன் தஸ்மை குருவே நமஹ"
மாத, பிதா, குரு, தெய்வம் முறையே மாதா பிதாவை அறியத்தருவார்கள் . பிதா, குருவை அறியத்தருவார்கள், குரு தெய்வத்தை அறியத்தருவார்கள். நாமும் அவ்வழியைப் பின்பற்றி தெய்வத்தை வழிபடும் முறையை பின்பற்றுவோமாக. தெய்வத்தை வழிபடும் முறை பல உண்டு.
அதில்

"காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாம நமச்சிவாயவே"

நாங்கள் காதலாகி அன்பு, பக்தி, பாசமாகவும் கண்களில் கசிந்து கண்ணீர் சிந்தி தெரிந்த வேதங்கள், பக்திப்பாடல்கள், தேவாரங்கள் பாடி தெய்வத்தை வழிபட வேண்டும். "குழந்தையும் தெய்வமும் ஒன்று" குழந்தைகளை எப்படி சீராட்டி பாராட்டி வளர்க்கிறோமோ அதேபோல தெய்வத்தையும் குழந்தையாக பாவித்து பணிந்து வணங்கி வேதங்கள், தேவாரங்கள், பாடல்கள் பூமாலையும் பாமாலையும் சேர்ந்து பாடி வழிபட்டு வந்தால் எமக்கு எவ்வித குறைகளும் இல்லாமல் நீடூழி வாழ வணங்கும் தெய்வம் அருள் புரிவார்.

இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் ஆலயம் பலரது முயற்சி, ஒத்துழைப்புகள், அன்பளிப்புகள் சேர்ந்து சிறப்பான ஆலயமாகக் கட்டி எழுப்பி மன்மத வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை மாதம் 11ம் நாள் 2015.04.24 வெள்ளிக்கிழமை சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்து அதில் சிவாச்சாரியார் ஆகவும் மற்றும் ஏனைய சிவாச்சாரியார்களுடனும் சேர்ந்து கும்பாபிஷேகத்தில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தமை நான் பெற்ற பெரும் பேறாகும். சிவாச்சாரியார்களுக்கும், ஆலய குருவிற்கும் மற்றும் ஆலயத்தில் தொண்டு செய்தவர்கள், பொதுவாக பங்கு பற்றிய அனைத்து மக்களுக்கும் எம்பெருமாட்டி ஸ்கந்தபுரம் இத்தியடி ஸ்ரீ நடனமுத்துமாரி அருள் புரிந்து இஷ்ட வரங்களை அருள ஆசிகூறி உங்களுடன் சேர்ந்து நடனமுத்துமாரி அம்பாளை பணிவுடன் வணங்குகிறேன்.

இங்ஙனம்
சிவாச்சாரியமணி, ஆகம ஆசான்
சிவஸ்ரீ . இரா. பாலசுப்பிரமணியக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை



அகில அண்டங்களைப் படைத்தும் காத்தும் அழித்தும் அருளியும் மறைத்தும் அம்பிகை அருவமாக எங்கும் நிறைந்து இருக்கிறாள். என் தாயாக மிளிரும் அம்பாள் நிர்மலமானவள், அவள் பரிபூரணியாய் ஆங்காங்கே கோயில் கொண்டு விளங்கும் திருவுருவங்களில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். ஆகமங்களில் கூறப்பட்டுள்ளபடி மந்திர பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் உருக்கொண்ட ஜீவராசிகளுக்கு அருள் புரியும் ஸ்தானமே ஆலயமாகும்.

அவ்வகையிலே என் தாய் அம்பாள் தன் மூர்த்தி பேதங்களில் ஒன்றான ஸ்ரீநடன முத்துமாரி தாயாக கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பதியிலே பிரதான வீதியின் அருகே இத்திமர நிழலிலே வீற்றிருந்து பன்னெடுங்காலமாக அருள்ஆட்சி புரிகின்றாள். இவ்வாலயம் இத்திமரத்தின் கீழ் சிறிதாக அமையப்பெற்று பிரதான வீதி வழியாக செல்வோர்கள், கிராம மக்கள் இடப்பெயர்வு காரணமாக ஸ்கந்தபுரம் கிராமத்திலே வசித்தவர்கள் போன்றோர்களால் அவ்வப்போது வழிபாடாற்றி வரும் காலத்தில் 1998ம் ஆண்டின் முற்பகுதியில் பங்குனி மாதத்தில் ( திருவாதிரை நட்சத்திரத்தில்) மடாலயமாக மூலஸ்தானம் அமைக்கப்பட்டு அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம் என்பன நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக கட்டிடப்பொருட்கள் இல்லாத காரணத்தால் சுண்ணாம்பு, சீமெந்து, மணல், காட்டுத்தடி போன்றவற்றால் அமைக்கப்பட்டு எனது தந்தையார் சிவஸ்ரீ இரா.பாலசுப்பிரமணியக் குருக்கள் அவருடன் முழங்காவில் விநாயகர் ஆலயத்தில் அக்காலப்பகுதியில் பிரதம குருக்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த சிவஸ்ரீ.நிவிர்த்தி சாதுக்குருக்கள் அவர்களும் இணைந்து கும்பாபிஷேகத்தினைச் சிறப்புடன் நடத்தினர்.

அன்று தொட்டு இவ்வாலயத்தின் நித்திய பூசகராக (ஆலய குரு) பணி செய்ய அன்னை எனக்கு பெரும் பாக்கியத்தை அருளி இருந்தாள். ஆட்டுவிப்பவள் அவள், ஆடுகின்றவர்கள் நாம். அதன்படியே 2002ம் ஆண்டு நடுப்பகுதியிலே குடும்ப சூழ்நிலை காரணமாக வவுனியா மாவட்டத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்காலப்பகுதிக்குள் 1999ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் என் திருமண வைபவம், 2000ம் ஆண்டு ஆனி மாதத்தில் சிவாச்சார்ய அபிஷேகம் என்பனவும் எனது பெற்றோரின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவும் அம்பாளின் மண்டபத்திலேயே நடந்ததையிட்டு இன்னும் நானும் எனது குடும்பமும் பெருமிதம் கொள்கின்றோம்.

இவ்வாறாக அனைத்து ஜீவராசிகளுக்கும் அருளாட்சி புரிந்து வரும் அன்னையின் திருவருளாலும், குருவருளாலும் அன்னையின் மீது தீராத பக்திகொண்ட ஆலய பரிபாலனசபைத் தலைவர் "இறைபணி செம்மல்" உயர்திரு. பொ.திருஞானசம்மந்தன் அவர்களும் என்மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரினாலும் புதிதாக அமைக்கப்பட்ட இந்த ஆலயத்திற்கு என் கரங்களால் அம்பாளின் குடமுழுக்கினை நிகழ்த்திய பெருமையும், பாக்கியமும் எனக்கு கிடைத்தமை நான் செய்த என் பிறவிப்பயனே என்று மனம் புளகாங்கிதம் கொள்ளச் செய்கின்றது.

இந்த ஆலயத்தினை பரிபாலனம் செய்யும் அன்பர்களும், பூசைகள் செய்யும் குருமார்களும், தொண்டுகளைச் செய்வோரும், அம்பாளின் பூசைகளை உபயமாக பொறுப்பெடுத்துச் செய்வோர்களும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் செய்தவர்களாகவும், பாக்கியசாலிகளாகவும் விளங்கக்கூடியவர்கள். அவ்வாறான பேறுபெற்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து ஆசி கூறி, மண்டலாபிஷேக பூர்த்தி தினத்தில் மலரும் கும்பாபிஷேக மலருக்கும் எனது நல்லாசிகளைக் கூறி வாழ்த்துகின்றேன்.

சுபம்

கிளி/ ஸ்கந்தபுரம் இத்தியடி
ஸ்ரீ நடன முத்துமாரி அம்பாள் திருக்கோயில்
(உற்சவகால பிரதமகுரு)
கும்பாபிஷேக பிரதமகுரு "கிரியா சுரபி",
"ஆகம ரத்னா",
"சிவாகம கிரியா பூஷணம்"
சிவஸ்ரீ பால கிருஷ்ண குமாரக் குருக்கள்
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்கந்தபுரம் இத்தியடி ஸ்ரீ நடனமுத்துமாரி அம்பாள் கும்பாபிஷேக மலர் ஆசிச்செய்தி



ஸ்கந்தபுரம் பதியில் இத்திமர நிழலில் கோயில் கொண்டு அடியார்களுக்கு அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ நடனமுத்துமாரி அம்பாளுக்கு கடந்த 24.04.2015 வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது.

இவ் ஆலயம் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் இரட்டைத் தளத்துடன் கூடிய ஸ்தூபி, வசந்தமண்டபம், சுற்றுமதில், களஞ்சியம், அன்னதான மடம் எனப் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று வர்ண வேலைப்பாடுகளுடன் அழகுற காட்சியளிக்கின்றது.

அம்பிகையின் ஆலயத்தில் சிறிது காலம் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட அடியேனுக்கும் இக்கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமை எனது வாழ்நாளில் மிகவும் மறக்க முடியாத நிகழ்வாகும்.


அம்பாளின் அருட்கருணை, அற்புதங்கள், சமய விடயங்கள் மற்றும் கும்பாபிஷேக நிகழ்வுகளையும் தாங்கியதாக சைவ மணம் கமிழ்ந்து சிறப்புடன் அரிய மலராக இக்கும்பாபிஷேக மலர் மிளிரவும், மலர் வெளியீடு சிறப்பாக நடைபெறவும் எல்லாம் வல்ல அகில லோக நாயகி அன்னை ஸ்ரீ நடன முத்துமாரி அம்பாளின் பாதம் பணிந்து உள்ளன்போடு ஆசி கூறுகின்றேன்.

சிவ ஸ்ரீ. க. கிருஷ்ணநாதக்குருக்கள்,
ஆலயகுரு ஸ்ரீமுத்துக்குமரன் ஆலயம்,
உறுப்பிட்டிய,
வத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



"ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம் பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்கக் காத்தாளை, அங்குச பாசங்குசமும் கருப்பும் அங்கையிற் சேர்த்தாளை முக்கண்ணியை தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே."

குடையான இத்திமரமே
கொடையான சக்திவரமே
நடையாக சுற்றிவரவே படையாக பக்தி வருமே
அணையாத வெற்றிச்சுடரே அழியாத நித்ய ஒளியே
அணையாக இன்பம் எழவே துணையாகும்
இத்திவிழுதே"

எல்லாம் வல்ல ஸ்கந்தபுரம் இத்தியடி ஸ்ரீநடன முத்துமாரி அம்பாளின் ஆசியை வேண்டி கிளிநொச்சி மாவட்டத்தின் எழில்மிகு ஸ்கந்தபுரம் எனும் பிரதேசம் நீர்வளம் நிலவளம்செழிக்கப் பெற்று சைவத் தமிழ் உலகம் சிறந்து விளங்கும் ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் அம்பாளின் தலவரலாறானது நூல் வடிவில் வெளிவருவது அம்பாளின் அருளேயாகும்.

"ஸ்ரீ இத்தியடி நடனமுத்து மாரியம்மன்" தலவரலாறு எனும் நூல் சீ.சூரியதாசன் (நூலாசிரியர்) அவர்களது பெருமுயற்சியால் கிடைத்த பேறாகும். இந்நூலாசிரியரது முன் உதாரணத்தைப் பின்பற்றி இன்னும் பல வைவசமய நூல்கள் வெளிவர இளம் சந்ததியினர் முன்வரவேண்டும் எனக் கூறி இந்நூல் சிறப்பாக வெளிவர எனது ஆசிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ உமாசங்கர் குருக்கள்
பிரதம குருக்கள் ஸ்ரீ நடனமுத்துமாரியம்மன்
ஸ்கந்தபுரம் , கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச செயலகம்
கரைச்சி
கரைச்சி பிரதேச செயலர்
**திரு. கோ. நாகேஸ்வரன்** அவர்களின்
வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சியின் மக்கள் குடியேற்றம் 1962இல் ஸ்கந்தபுரத்தில் ஏற்படுத்தப்பட்ட போது அந்த மக்களின் மத சம்பிரதாயங்களை பேணுவதற்காக அப்பிரதேச மக்களால் ஏற்படுத்தப் பட்டதே இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகும்.

கீழைத்தேச கலாசாரம் மத சம்பிரதாயங்களோடு பின்னிப்பிணைந்த வாழ்வியல் முறைமையைக் கொண்டதாகும். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஆதி திராவிட இனமும் தனது அடையாளங்களுடன் மத அடையாளங்களையே பெருவாரியாக கொண்டி-ருந்திருக்கிறது.

அந்த வகையில் கிளிநொச்சியின் மக்கள் குடியேற்றத்துடன் அந்த மக்களின் வழிபாட்டுக்கென ஆலயங்கள் இப்பிரதேசங்களில் எழுந்தாலும் அதற்கு முந்தைய தொன்மையான வரலாற்றில் கிளிநொச்சியில் குறிப்பாக ஊற்றுப்புலமும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் மன்னர்களுடைய ஆட்சி முறைமைகள் இருந்திருக்கக் கூடிய வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. எனவே மிகத் தொன்மையான வரலாறு ஒன்று இப்பிரதேசத்திற்கு இருக்கின்றது என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் ஆரம்பக்குடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயத்தின் வரலாறு ஆவணப்படுத்தப்படுவது என்பது நாம் வரலாற்றுக்குச் செய்யும் மிகச்சிறந்த சேவையாகும். எமது வரலாறுகளையும், பூர்வீகங்களையும், அடையாளங்களையும் தொலைத்து வருகின்ற இந்த வேளையில் இப்படியானதொரு முயற்சியில் இந்த ஆலயத்தின் நிர்வாகத்தினர் ஈடுபட்டிருப்பதை எண்ணி அவர்களை வாழ்த்துகின்றேன். அவர்களது இந்த முயற்சி தொடரட்டும். இப்படியான பணிகளை இப்பிரதேசத்தில் இருக்கின்ற மற்றைய ஆலயங்களும் செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. கோ.நாகேஸ்வரன்**
*பிரதேச செயலர்*
*பிரதேச செயலகம்*
*கரைச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தியடி அம்மனின் மகிமையும் அருட்கடாட்சமும்

கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தவனம் கனகசபையாகிய எனக்கு அன்று இத்தியடி அம்மனாக காட்சி கொடுத்து உருவாகி பல அம்மன் அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க அளவெட்டி ஈன்றெடுத்த அருளாளன் அருட்கவி சோதிட மாமணி எனப்பல புகழைத் தனதாக்கிக் கொண்ட அளவையூர் வினாசித்தம்பி அவர்களால் ஸ்ரீநடன முத்துமாரி அம்மன் எனப் பெயர் சூட்டப்பட்டு "ஞானக் கொழுந்தே நடன முத்துமாரியே" என்ற வெண்பா பாடி சிறப்பிக்கப்பட்ட அன்னை அவள் அருட்கடாட்சத்தை நினைவு கூருகையில் சிறியேன் ஆகிய நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கட்டுவனில் இருந்து விவசாயம் செய்வதற்காக எழுபத்திரண்டுகளில் ஸ்கந்தபுரம் சென்ற அடியேன் அங்கே ஒரு கிணற்றை வெட்ட முனைந்த வேளையில் அம்மனின் அருளால் அம்மனை ஆதரித்து வந்த கந்தையா தங்கராஜா என்பவர் என்னை முகம் தெரியாத நிலையில் அக்கிணற்றை அமைப்பதில் வழிவகைகளைக் கூறித்தந்தார் என்றால் அவர் அம்மன் மீது கொண்ட பக்தியும் அவர் மூலமாக அம்மன் எனக்களித்த கருணையும் என்றே நான் இன்று வரை நம்புகிறேன்.

அம்மன் எனக்களித்த அருளின் பிரகாரம் சிலகாலம் நான் அம்பாள் அடியவராக அவ்விடத்தில் வாழ்ந்து அம்மனுக்கு தொண்டாற்றி வந்தேன். எனது தந்தையார் பாம்பு தீண்டி இறந்த வேளையில் அதுவும் தன்னுடைய செயலே என அம்மன் எனக்கு தன்னை வெளிக்காட்டி தனது திருவிளையாடலே என ஏற்றுக்கொண்டாள். இப்பொழுது இவற்றை எல்லாம் நினைக்கும் போது எனக்கு மயிர்கூச்செறிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமல்லாமல் நல்லை வாழ் வெயிலுகந்த விநாயகன்போல் நானும் கமம் செய்த காலத்தில் கொட்டுமழையிலிருந்து எனது நெற்கதிர்களைக் காப்பாற்றி அதனை நெல்லாக்கி ஏன் அதனைப் பணமாக்கித் தந்த பெருமையும் அந்த அம்மாவைச் சார்வது மட்டுமல்ல அவளது அருட்கடாட்சமே அதுவென்பது யாவரும் அறிந்த உண்மை.

ஸ்கந்தபுரத்தின் பிரதான வீதியின் நடுவிலே தான் அம்பிகை குடிகொண்டிருந்தாள். காலஞ்செல்ல போக்குவரத்து வசதிகள் வளம் பெற அந்த ஆலயத்தை அங்கிருந்து அகற்ற வேண்டுமென அரச தரப்பினரால் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தவேளைதனில் அம்மனின் அருட்கடாட்சத்தினால் அந்த வீதியையே மேற்குப்புறமாக இடமாற்றியமைப்பதற்கு அரச அதிகாரிகள் எல்லோரும் சம்மதித்து சிரமதானத்தின் மூலம் வீதி மாற்றியமைக்கப்பட்டது. இதுவும் அம்மனின் ஒரு அற்புதம் என்றால் மிகையாகாது. அது மட்டுமல்ல இத்திமரத்தின் கீழ் வீற்றிருந்து சிறு ஓலைக்கொட்டிலில் அமர்ந்து இன்று பெரிய ஆலயமாக உருவெடுத்து நிற்பதை நினைக்கும் போது அவள் பெருமையை என்னென்று கூறுவது.

*1972* களில் கந்தையா தங்கராசா என்பவர் அதனை ஆதரித்தவர். அவரைத் தொடர்ந்து நானும் அவருடன் சேர்ந்து அவ்வாலயப்பணியில் ஈடுபட அன்னையின் அருள் எனக்கும் கிட்டியது. அன்று தொட்டு *1982* களில் நான் வெளிநாடு செல்லும் வரை அவள் பணியில் மூழ்கிக் கிடந்தேன். அதன்பின் *2004* இல் நான் திரும்பி வந்து அம்பாளைத் தரிசித்து அவளின் திருப்பணிக்கு என்னாலான உதவிகளைச் செய்து விட்டு திரும்பிச் சென்றுவிட்டேன். மீண்டும் நான் பல தடவைகள் எனது தாய்மண்ணிற்கு வந்து அம்பாளுக்கு ஆகவேண்டியதை ஆற்றி வந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அம்பாளின் அருட்திறன் அன்றோ. அன்று சம்பந்தர் உமையவனிடம் ஞானப்பால் உண்டு ஞானசம்மந்தராகி பலதேவாரப் பதிகங்களைப்பாடி எமது சமயத்தை இந்த நிலைக்கு வளர வித்திட்டார். இன்றும் எனக்கு வாழ்வளித்த ஸ்கந்தபுரப்பகுதியிலே ஞானசம்பந்தர் ஒருவர் உருவெடுத்து எமது இத்தியடி அம்மன் மேல் கொண்ட பற்றுக் காரணமாக அவ்வாலயத் திருப்பணியை பல இன்னல்களின் மத்தியில் மேற்கொண்டு இன்று அவ்வாலயம் குடமுழுக்கு செய்யப்படுகின்ற நிலைக்கு வந்தமையை இட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இத்தியடி அம்மனாக, நடன முத்துமாரியாக அவள் வீற்றிருந்து என்றென்றும் அருள்பாலிக்க அவள் அருளையே வேண்டி நிற்கின்றேன்.

கந்தவனம் கனகசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

ஸ்கந்தபுரம் இத்தியடி ஸ்ரீ நடனமுத்துமாரி அம்மன் பல வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் ஆலயம் ஆகும். பல இயற்கை வளங்கள் சூழ இவ்வாலயம் அமைந்திருப்பது அனைவருக்கும் சிறப்பான விடயம் ஆகும்.

தற்போது வேதாகம முறைப்படி பூசைகள், விழாக்கள் நடைபெற்று வருகின்றன. பங்குனி உத்தரத்தினைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்து தினங்கள் மகோற்சவப் பெருவிழா நடைபெற இருப்பது சிறப்புடையதாகும். ஆலயத்தில் பண்ணிசை நிகழ்வுகள் இடம்பெறுவதும் ஓர் சிறப்பம்சமாகும்.

இவ்வாலயம் மிகவும் சிறப்பு வாய்ந்த வரலாற்றுப் புகழ்பெற்று ஓர் உன்னதமான ஆலயமாக விளங்க வேண்டும் எனவும் மேலும் பல மண்டப வசதிகளையும் பெற்று ஓர் சிறந்த ஆலயமாகவும் திகழ வேண்டும் எனவும் கூறுகின்றேன்.

தற்போது இவ்வாலயத்துக்கு என்று பாடல்கள், வரலாற்று நூல் போன்றன எழுதப்பட்டமை ஓர் முக்கியமான விடயமாகும். இந்நூலாசிரியரான சீ. சூரியதாசன் அருள்மிகு ஸ்ரீ நடனமுத்துமாரி அம்மன் ஆலயம் பற்றி ஆராய்ந்து அதனை நூல் வடிவில் வெளியிட முனைந்தமை ஆலய நிர்வாகத்தார் ஆகிய எமக்கும் பக்த அடியார்களுக்கும் சிறந்த பயனாகும்.

அவரின் இம்முயற்சியானது ஏனைய ஆலயங்களின் வரலாறுகளும் தனிப்புத்தகமாக வெளிவருவதற்கு ஓர் உந்துசக்தியாக அமைய வேண்டும் திரு. சீ.சூரியதாசன் அவர்கட்கு எல்லாம் வல்ல இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் திருவருள் என்றும் கிடைக்கப் பெறுவதோடு அவர் என்றும் சிறப்புற வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

நன்றி

திரு. பொன்.திருஞானசம்மந்தன்
தலைவர்
இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரியம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



ஸ்கந்தபுரம் அருள்மிகு இத்தியடி நடன முத்துமாரி அம்பிகையினுடைய ஆலய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் ஆய்வு நூலினை வெளியிட வேண்டுமென்னும் பேராவல் இந்நூலினை எழுதிய சிந்தனைச் செம்மலும் இந்துநாகரீக பாடத்தினை உளவிருப்போடும், சித்த சுத்தியோடும் கற்பித்து வருகின்றவருமான சீவரட்ணம் சூரியதாசன் என்பவர் எனது பெருமதிப்பிற்குரியவராவார். இவர் தனது கன்னிப்படைப்பாக வவுனியா மாவட்டத்திலமைந்த புகழ்பெற்ற சிந்தாமணிப் பிள்ளையாரின் தலவரலாற்றினை வெளியீடு செய்து பலரது உள்ளங்களில் அழியாத இடத்தினைப் பெற்றுக் கொண்டவராவார். வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் சமய ஆர்வலர்களுக்கும், சைவப் பெற்றோர்களுக்கும், பாடசாலை மாணவர்கட்கும் இந்நூல் பெரும் வரப்பிரசாதமாகும், இவ்வாசிரியர் வவுனியா பல்கலைக் கழக முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ மாணவராக இருந்த போதிலும்

" கைவிளக்கின் பின்னே போய்க் காண் பார் போல் – மெய்ஞான
மெய்விளக்கின் பின்னே போய் மெய்காண்பதென்னாளோ "

என்றாங்கு திருவருள் நாட்டமுடைய சூரியதாசன் ஆன்ம விசாரமுடையவராக, பக்தி வலையிற் பாடுவோனாகத் தோற்றம் பெற்றமையினாலேயே தனக்குகந்த துறையிற் கால்பதித்து மாணவர்கள் மனதில் அழியா இடம் பெற்றவராகக் காணப்படுகின்றார். அது மாத்திரமின்றி தான் கற்பிக்கும் துறையிற் துறைபோக கற்றுப் பாண்டியத்துவம் பெற்று பொருத்தமான பாத்திரமாகத் தன்னை மாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார்.

" நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வான்மை கடை"

எனத் தெய்வப் புலவர் கூறிய வண்ணம் உலகிலே வாழும் பெரும்பான்மை மக்கள் நிலையற்ற பொருட்களை நிலையான பொருளெனவே எண்ணி வாணாளை வீணாளாக்கி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இந்தப்பிள்ளை தனக்கும் ஏனையோர்க்கும் மறுமைப்பயனை ஈட்டுவிப்பதற்கான செயன்முறைகளைச் சாதனை மூலம் நிறைவேற்றி வருகின்றார். பொருள் தாகம் உடையவராயின் வேறு துறைகளைத் தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறின்றி திருவருளுக்கு ஒப்ப எண்ணுபவன் அதற்கொப்ப வினையாற்றுகின்றான். இயற்கையின் மேலாம் நியதிக்கொப்ப எண்ணுகின்றபடியினால் அதுவே அவரது உருவாக்கற் சக்தியாக விளங்குகின்றது. தெய்வத்தின் பெருமையை எண்ணுமளவு மனது தெய்வப் பெற்றி பெறுகின்றது. பெரிய இலட்சியத்திற்கேற்ற பெருவாழ்வு வாழ்ந்து பல்வேறு ஆக்கங்களை ஆக்கி இவ் வையகம் வாழ வழிகாட்ட வழி பிறப்பதாக

கலாபூசணம் திருமதி. செல்வராணி சோமசேகரம்பிள்ளை
சமாதான நீதவான்
இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானின் அருளை வேண்டிக் கொண்டு, நூலாசிரியன் என்ற வகையில் இந்நூலுக்கான முன்னுரையை எழுதக் கடமைப் பட்டுள்ளேன்.

ஆரம்பகாலத்திலிருந்தே பிள்ளையார், அம்மன் தெய்வங்களின் தெய்வக் கடாட்சத்தால் ஈர்க்கப்பட்டு சிறுபராயத்திலிருந்தே ஆலயத் தொண்டுகள், எனது தந்தை த.சீவரட்ணம் அவர்களது வழிகாட்டலில் புரிந்து வந்துள்ளேன். அதற்கு நான் பிறந்த மண்ணாகிய யாழ்/வாதரவத்தை ஓர் காரணமாகும்.

ஏன் எனில் அங்கே குடிகொண்டிருக்கும் அருள்மிகு வாதரவத்தை கேதுவூர் பிள்ளையார் ஆலயத்திலும் வீரவாணி நாச்சிமார் ஆலயத்திலும் வழிபாடாற்றி பிள்ளையார்அம்மன் அருட்கடாட்சத்தைப் பெற்றதற்கு அடிப்படைக் காரணியாக விளங்கியுள்ளன. அதாவது பிறந்ததிலிருந்து 1995யாழ் இடப்பெயர்வு வரைக்கும்அங்கே இருந்து ஆலயத் தொண்டுகள் புரிந்து இன்று இத்தியடி அம்மன் ஆலய வரலாற்றை நூல் வடிவில் கொண்டு வரும் அளவிற்கு என்னை தூண்டியது சமயப்பற்றே ஆகும்.

1995க்குப் பின்பு நாம் வன்னி மண்ணில் வந்து ஸ்கந்தபுரம் பகுதியில் குடியமர்ந்த காலத்திலிருந்து தற்போது வரைக்கும் எமக்கும் இத்தியடி அம்மன்ஆலய தரிசனத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் சமய நூல்களை முதற் படைப்புக்களாக வெளியிட எண்ணி எனது கன்னிப் படைப்பாக வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வரலாற்றினை தமிழ்மணிஅகளங்கள் அவர்களின் வழிகாட்டலில் வெளியிட்டேன். (தற்போது அவர் கலாநிதி அகளங்கன்) அதற்கு மேலும் சிறப்புச் சேர்த்தாற் போல் ஆசிரியர் கதிர்காமசேகரன் அவர்களும் உந்து சக்தியாக இருந்தார். இலக்கியங்களைதுறைபோகக்கற்ற பெரியவர்களும் இவர்கள் இருவரும் அடங்குவர். அந்நூலை நான் வெளியிட்ட போது திரு. திருமதி.சொ.சுப்பிரமணியம் குடும்பம் (இல- 26, 10வது ஒழுங்கை, வைரவபுளியங்குளம்) எனும் முகவரியிலேயே வசித்து வந்தேன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் எல்லோருடைய ஆசிகளையும் பெற்று இந்நூலான ஸ்கந்தபுரம் இத்தியடிஅருள்மிகு ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் தல வரலாற்றினை எழுதத்தலைப் பட்டுள்ளேன்.

அதாவது இந்நூல்எழுதி வெளியிட வேண்டிய தேவையும் எனக்கிருந்த ஆர்வமும் திரு. விமலேஸ்வரன் அவர்களால் நிறைவேறுகிறது. ஏனெனில் நான் வேறு ஆலயத்தின் நூல் ஒன்றை எழுத எத்தனித்து அதன் இடையூறுகள் என்னைத் தடுத்த காரணங்களைக் கதைத்த போது அவர் இத்தியடி அம்மன் வரலாறும் எழுத வேண்டும் என ஏற்கனவே எனக்கிருக்கும் அனுபவத்தையும் எடுத்தியம்பி எழுதித் தந்தால் நன்மையாக இருக்கும் என்று என்னிடம் அளவளாவியபோது நானும் எனது மனவிருப்பை தெரியப்படுத்தி இன்று இந்நூலை வெளியிட முனைந்தேன்.

அதன் பயனாகக் கிடைத்த அரிய சந்தர்ப்பமே இன்று இந்நூலை அம்பாளின் அருட்கடாட்சத்துடன் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட தலைப்பட்டேன். இது எனக்கு கிடைத்த ஓர் அரிய வாய்பாகவும் பெரும் பாக்கியமாகவுமே இதனை எண்ணுகின்றேன்.

இதற்கு எனது அம்மா சீ. பவளமலர், அண்ணா சீ.விஷ்ணுதாசன் ஆகியவர்களின் ஒற்றுமையும் ஊக்குவிப்பும் காரணிகளாக அமைந்தன. இங்கு சிறப்பான விடயம் யாதெனில் எனது மனைவி சு.ஜெயபிரவீனா அவர்களின் உறுதுணை பாராட்டப் படவேண்டிய விடயமாகும்.

ஏனெனில் நேரிலும் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் இத்தியடி அம்மன் வரலாறு எழுதும் விடயம் என்ன கட்டத்தில் இருக்கின்றது என்று என்னை அடிக்கடி உற்சாகப்படுத்துவார். இதனாலும் குறுகிய காலத்தில் இந்நூலுக்காக என்னை கூடிய வேலையைச் செய்யத் தூண்டியது.

இந்தப் பிரதேசத்தில் என்னை இந்துநாகரிக பாட மாணவனாகவும் ஆசிரியராகவும் தரம் உயர்த்திய பெருமையும் சிறப்பும் திரு. கனகலிங்கம் (கனைக்ஸ்) ஆசிரியருக்கும் திருமதி.நா.நாகேஸ்வரன் ஆசிரியர்க்கும் உரியதாகும். இன்று நான் உங்கள் முன் ஒரு நூலாசிரியனாக நிற்பதற்கு இதுவும் ஓர் காரணியாகும். "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பார்கள். எனக்குக்கிடைத்த ஆசிரியர்களுள் இவர்களுக்கு என்றுமே சிறப்பிடம். எனது வாழ்நாளில் மறக்க முடியாத மனிதர்கள் சிலர் அவர்களுள் இவர்கள் இருவரும் உளர்.

இந்து நாகரிக, சமய பாடங்களை தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை கற்பித்த அனுபவம். இந்நூலை ஆக்குவதற்கு வழிசமைத்தது. எவ்வாறு எனில் திருக்கேதீச்சரம், கோணேச்சரம் போன்ற ஆலயங்களின் வரலாறுகள் அன்று தொட்டு இன்று வரை சமய, இந்துநாகரிக பாடத்திட்டங்களில் இடம்பிடித்து இன்றுவரை மாணவர்களால் கற்பதற்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் வரலாறாக இடம்பிடித்துள்ளன. அதுபோலவே ஸ்கந்தபுரம் ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் ஆலயமும் இடம் பெறவேண்டும் என்பதே இந்நூலாசிரியராக நான் உங்கள் முன் வைக்கும் வேண்டுகோளாகும்.

இங்கு நான் முக்கியமாக குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயம் யாதெனில் எனது இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாபூசணம் திருமதி செல்வராணி சோமசேகரம் பிள்ளை அவர்களைப் பற்றியதாகும். குறிப்பாக 1996- 2002 காலப்பகுதிகளில் இவர் இவ்வாலயத்தில் சமயச் சொற்பொழிவுகளை மிகவும் திறம்பட நடாத்தியுள்ளார். அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டால் கசியாத நெஞ்சும் கசிந்து உருகும். அந்தளவுக்கு மிகவும் இனிமையாக பார்ப்போர், கேட்போர் எமது சமய உண்மைகளை விளங்கிக் கொள்ளும் அளவிற்கு மிகவும் எளிமையாக பிரசாரங்களை மேற்கொள்வர். நானும் அதனைக் கேட்டு சுவைத்துள்ளேன். அவ்வளவு பக்திச் சுவை ததும்பும் வண்ணம் அமைந்திருந்தது.

இந்நூல் வெளிவர இருக்கும் விடயம் தெரிந்து என்னை மேலும் ஊக்கப்படுத்திய திருமதி.இராசமூர்த்தி வசந்தாதேவி, திருமதி.விமலேஸ்வரன் விமலாதேவி, திருமதி. லதாறஞ்சினி ஜீவதாசன், திருமதி சிவானந்தன் நந்தினி, செல்வி. றஞ்சினிதேவி போன்ற ஆசிரியர் குழுவுக்கும், எனது அன்புக்கும் மேலான மாணவச் செல்வங்களான கடந்த வருடம் க.பொ.த.சா.த பரீட்சை எழுதிய எனது ஆங்கிலக் கல்வி நிலையத்தில் கல்வி பயின்ற மாணவர்களுக்கும் தற்போது தரம் 01தொடக்கம் க.பொ.த. உ.தரம் வரை என்னிடம் கல்வி பயின்று கொண்டு இருக்கும் மாணவச் செல்வங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் அச்சுப்பிழைகளை என்னுடன் சேர்ந்து திருத்தித் தந்த எனது அன்பு மாணவியான ச.சுஜித்தாவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலய வரலாறு வெளிவர வேண்டும் என எனக்கு எல்லா வகையிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்த தற்போதைய ஆலய நிருவாகத்தினர், முன்னைய நிர்வாகத்தினர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாலய நூலுக்கான அட்டை வடிவமைப்புச் செய்வதற்கு படப்பிடிப்ப மேற்கொண்ட கிருஷ்ணா வீடியோ போட்டோ உரிமையாளருக்கும் அச்சுப் பதிப்பு, அட்டை வடிவமைப்பு என்பவற்றை மேற்கொண்ட வேழன் பதிப்பகத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக அம்பாளின் அடியவர்கள் அனைவருக்கும் இதிலே எல்லோருடைய பெயரையும் குறிப்பிடமுடியாவிட்டாலும் ஏதும் தவறுகள் இருப்பின் அதனையும் மன்னித்து பொறுத்தருளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்நூல் எந்த நோக்கத்திற்காக வெளிவருகிறதோ அந்நோக்கம் இனிதே நிறைவேறவும் இவ்வாலயம் வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயமாகத் திகழவும், பக்தகோடிப் பெருமக்கள் தரிசிக்கும் ஆலயமாகவும் மேலும் பல பிரமாண்டமான அமைவுகளைப் பெற்று விளங்கவும் சகல வல்லமைகளும் பொருந்திய ஸ்ரீ நடன முத்துமாரியம்மனை வேண்டிக் கொள்கின்றேன்.

நன்றி

சீ. சூரியதாசன் *(B.B.M Special Management English Medium, Advance Dip.In Manegement, Dip English U.K (London)*
இயக்குனர்,
விக்னேஸ்வரா கல்வி நிலையம்
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தின்புதிய தோற்றம்





அம்பாளின் சர்வாங்க நியாசம்
பிரதான குருவால் நிகழ்த்தப்படுதல்



கிரியை ஆரம்ப நிகழ்வின் போது





கும்பாபிஷேக தினத்தில் மாலை
சந்தனக்காப்பு அலங்காரம் செய்தல் (மூலஸ்தானம்)




அக்கினி வழிபாடு செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தபுரம் இத்தியடி அருள் மிகு ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் தல வரலாறு

## ஆலய அமைவிடம்

இவ்வாலயம் இலங்கையின் புகழ்பூத்த மாவட்டங்களில் ஒன்றாகிய கிளிநொச்சி மாவட்டத்திலே எழில்மிகு ஸ்கந்தபுரம் எனும் பிரதேசத்திலே அமைந்துள்ளது. பொதுவாக நீர்வளம், நிலவளம் செழிக்கும் பிரதேசமாகவே இப்பிரதேசம் விளங்குகின்றது. நீர்வளம், நிலவளம் செழிக்கும் ஸ்கந்தபுரம், அக்கராயன், கோணாவில் , மணியங்குளம், முட்கொம்பன், நஞ்சுண்டங்காடு போன்ற கிராமங்களின் மத்தியில் அமைந்துள்ளது. பொதுவாக பசுமையின் இருப்பிடம் என்றே இப்பிரதேசங்களைக் கூறிக்கொள்ளலாம்.

இவ்வாறு பலசிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட ஸ்கந்தபுர பிரதேசத்தில் முருகன் ஆலயத்திற்கு அருகாமையிலும் இல.01 ஸ்கந்தபுரம் பாடசாலைக்கு முன்பாகவும் ஸ்கந்தபுரம் பிரதான வீதியோரத்தில் அழகிய பசுஞ்சோலைகள் சூழப்பெற்ற இத்தி மரத்தடியில் நடனமுத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயம் அமைந்துள்ள சூழல் இவ் ஆலயத்தின் தனிச்சிறப்பையும் மகிமையையும் எடுத்துக்காட்டுகின்றது. ஆலய அமைவிடச்சூழலின் பெயராலேயே இவ்வாலயம் அழைக்கப்படுவது மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும். அதாவது இத்தியடி அம்மன் என்றே அழைக்கப்படுவதும் குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

ஸ்கந்தபுரத்தின் பிரதான வீதியோரத்திற்கு அருகாமையில் இருப்பதால் அனைவரும் தரிசித்து பயன் பெறும் ஓர் சிறப்பான ஆலயமாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய தல வரலாறு

இவ்வாலயத்தின் பண்டைய வரலாறு பற்றி நாம் நோக்கும் போது அன்று தொடக்கம் இன்றுவரையுள்ள பல வரலாற்றுச்சிறப்புக்களைக் கூறிக்கொள்ளலாம். அந்தவகையில் உள்ள தல வரலாற்றுச் சிறப்புக்களை நாம் நோக்குமிடத்து 1962 ம் ஆண்டு காடுகள் சூழப்பெற்று அமையப்பெற்ற இவ்வாலயம் "காடுகள் வெட்டி துப்பரவு செய்து கொண்டு இருந்த போது இயற்கையாகவே அல்லது தானாகவே அமையப் பெற்ற இத்தி மரத்தடியில் எழுந்தருளியுள்ளது.

மூளாய் கந்தசாமி என்பவரால் காணித்திட்ட அமைவிற்கேற்ப" கெப்பினேரிகளாய் இருந்த இவ்வாலயப் பிரதேசம் துப்பரவு செய்யப்பட்டபோது பத்துக் காணிகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. சிறப்பான விடயம் என்னவெனில் தானாகத் தோன்றிய மூர்த்தியாகவே இவ்வாலயம் கருதப்படுகின்றது. அதாவது சுயம்பு என்று கூறுவது சாலச்சிறந்தது. இவ்வாறு தானாகத் தோன்றிய இத்திமரத்தடியில் அம்மன் தோன்றியமைக்கு ஓர் காரணமும் உண்டு. என்னவெனில் "ஓர் பெண் கனவில் தோன்றி எனது பக்க காலை வெட்டி எறிந்து விட்டாய் என்று கனவில் கூறியுள்ளார்." [இத்தி மரத்தடி வரைக்கும் அழைத்து வந்து இது எனது இடம் பூர்வீகம் என்று கூறிவிட்டு மறைந்து சென்றதாக நம்பப்படுகின்றது]. அவ்வாறு கனவில் பெண் உருவில் வந்து கூறிச் சென்றது அம்மன் என்றே இன்றுவரை அறிய முடிகின்றது .

அவ்வாறு கனவில் அம்மன் காட்டிய இடத்திலேயே அன்று கல் வைத்து கற்பூரம் ஏற்றி வழிபடப்பட்ட ஆலயமே இன்று எம்முன்னே காட்சி தரும் புகழ்பூத்த இத்தியடி நடனமுத்துமாரியம்மன் ஆலயம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதிய ஆலயத்தின் எழுச்சி


வசந்த மண்டபம்


குபேர மகா லட்சுமி பூஜையின் போது


மணிக்கூட்டுக்கான
அபிஷேகம்


குருமார்களை
அழைத்து வருதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலய வரலாற்றோடு ஓர் அபூர்வ விடயத்தினை கூறிக்கொள்ளலாம். யாதெனில் " காடுகள் சூழ்ந்த பிரதேசமாக இருந்தமையால் ஆலயம் அமைந்துள்ள இத்தி மரத்தடியை துப்பரவு செய்ய எண்ணி அவ் இத்தி மரத்தை அகற்ற எண்ணி அதன் பக்க வேரிலே கோடாரி கொண்டு வெட்டியபோது வெட்டியவரின் தலையில் அடிபட்டு இரத்தக்கறை ஏற்பட்டதால் அதனை அவர் ஏதோ புதுமையுள்ளதாக உணர்ந்து வெட்டுவதை நிறுத்திவிட்டார்.

பின்பு அதே இடத்தை தென்னிலங்கையைச் சேர்ந்த சிலர் காடழிக்கும் இயந்திரத்தின் உதவியுடன் இத்திமரத்தை அழிக்க எண்ணிய போது அது கைகூடவில்லை. மாறாக ஒன்றரை மாதங்களுக்கு மேலாக அவ்வியந்திரம் அந்த இடத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு அவ்விடத்திலே நிறுத்திவைக்கப்பட்டிருந்தமையினை நாம் ஆரம்ப வரலாறுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

சங்கானைக் கந்தையா, கந்தசாமி சுப்பிரமணியம் என்போரால் ஆரம்பத்தில் கல், சூலம் என்பன வைத்து வழிபட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் தங்கராசா (மோகனா அக்காவின் தந்தை) அவர்களால் கும்ப பூசையாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் இன்று குருக்கள் பூசை செய்யும் அளவிற்கு மிகவும் சிறப்பாக எழுச்சி பெற்றமை எடுத்துக் கூறக்கூடிய விடயமாகும்.

இவ்வாலயத்தின் அமைவிடம் பற்றியும், திசை பற்றியும் அறிய ஆவல் கொண்டு ஆலோசனை ஒன்றைப் பெறுவதற்காக அளவெட்டி வினாசித்தம்பி என்பவரிடம் சென்று அவரை அழைத்து வந்து வினாவிய போது அவர் தனது அனுபவ அறிவாலும் நினைத்த காரியம் சொல்லும் திறமையினாலும் அதனைக்குறிப்பால் உணர்த்தி எடுத்துக் கூறி விளக்கியிருந்தார் என்றும் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய ஆலோசனை எவ்வாறு அமைந்தது எனில் தெட்சிணா மூர்த்தி தெற்கு நோக்கியே அமர்ந்து இருக்கின்றார் ஆகையால் இவ்வாலய அம்மன் தெற்கு நோக்கியே அமையப் பெறும் அவ்வாறு அமைவதால் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று திசைகளுக்கு ஏற்றாப் போல் தெய்வங்கள் அமர்ந்து அடியவர்களுக்கு அருளளிக்கும் விதத்தினை எடுத்துக்கூறியிருக்கின்றார் "அளவையூர் அருட்கவி" எனப்புகழப்பட்ட அவர் ஞானக் கொழுந்தே நடன முத்துமாரியே----- எனத் தொடங்கும் ஒரு வெண்பாப் பாடலையும் இவ் அம்மனுக்கு இயற்றிக் கொடுத்துள்ளார் என்றும் பண்டைய வரலாற்றுச்சிறப்புக்கள் விளக்கப்படுவது நோக்குதற்குரியது. இதன் முன் சிறு ஒன்றை

மேலும் இவ்வாலய வளர்ச்சியில் பங்கு கொண்ட முன்னைய பிரதமகுருக்களாக அல்லது தற்போது உற்சவகால குருக்களாக இருப்பவருமாகிய பாபுக்குருக்கள் (சிவஸ்ரீ பாலகிருஷ்ண குமாரக் குருக்கள்) இவர் குறிப்பிடுகையிலே திசை சம்பந்தமான குழப்பம் நிலவிய அவ்வேளை அம்மனுக்குப் பூக்கட்டி பார்த்தபோது தெற்கு நோக்கி அமைவதற்குத்தான் அது ஏற்புடையதாக இருந்தது என்றும் தெற்கு நோக்கி அமைவதால் மூர்த்திக்கு கீர்த்தி சிறக்கும் என தனது அறிவாற்றல் என்பவற்றைக் கொண்டு எடுத்துக் கூறியிருந்தார். அதாவது இவ்வாலயத்தின் கீர்த்தி மேலும் மேலும் பெருகும் என எடுத்துக் கூறியிருந்தமை இங்கு நோக்கத்தக்கது.

1968 களில் இவ்வாறு பல நல்ல ஆலோசனைகள் கருத்தில் கொண்டு தெற்கு நோக்கி சாதாரண குடிசையில் சக்கரை, சுண்ணாம்பு கொண்டு ஊர்மக்கள் இதனை ஓர் மடாலயமாக ஆரம்பித்தனர். இதற்கான ஆரம்ப கட்ட வேலையாக பனையோலையால் கூரை வேயும் பொறுப்பை கதிரவேலு என்பவர் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான குருக்கள் அக்னி வழிபாடு செய்தல்



மகா சபையில் கும்பாபிஷேக நிகழ்வு



பிரதான மூலஸ்தான கல் தூபிக்கான அபிஷேகம் பிரதான குருக்களால் நிகழ்த்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அறியப்படுகின்றது. அதற்குரிய ஏற்பாட்டை கந்தசாமி என்பவர் மேற்கொண்டார்.

இவ்வாறு ஆரம்பத்தில் மடாலயமாக எழுச்சி பெற்ற இவ்வாலயத்திற்கு அபிசேகம் செய்யவென வெற்றிலை, பாக்கு, எண்ணெய் முதலிய அபிசேகப் பொருட்களை மோகனா அக்கா குடும்பம் (கார்த்திகேசு பாக்கியம், கந்தப்பு தங்கராசா) கொடுத்துதவி வந்தார்கள் என்றும் அன்று தொட்டு இன்று வரை அக்குடும்பத்தார்க்கும் இவ்வாலயத்திற்கும் அதிக ஈடுபாடு இருப்பதையும் , ஆலயத்திற்கு அருகாமையிலேயே அவர்கள் குடிகொண்டிருப்பதனூடாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறு பல விடயங்களை பண்டைய வரலாற்றுச் சிறப்புக்களாக கூறிக்கொள்ளலாம்.

கப்பல் கந்தசாமி எனப்படும் இவர் இத்தியடி அம்மன் ஆலய ஆரம்ப கால வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். திரு.பொன் சம்மந்தன் அவர்களை ஆலயத் திருப்பணியில் உட்படுத்திய பெருமையும் இவரைச்சாரும். இவர் தற்போது உயிருடன் இல்லை.
நினைவழியா நாட்கள்......!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆலயத்தின் வரலாறு

**இவ்ஆலயத்தின் பிரமாண்டமான எழுச்சி அல்லது புதிய கோயிலின் வளர்ச்சி**

இவ்வாலயத்தின் எழுச்சியானது இன்று எம்மவர்களை மெய்சிலிர்க்கும் வண்ணம் அல்லது பக்த அடியார்களை ஈர்த்துக் கொள்ளும் அளவிற்கு மிகவும் சிறப்பாக அமைந்து, அம்பாள் அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றார்.


இன்று இவ்வாலயம் இவ்வாறு மிகவும் சிறப்பாக எழுச்சி பெறுவதற்கு தற்போது தலைவராகவுள்ள பொன்னம்பலம் திருஞானசம்மந்தன் (சம்மந்தன்) அவர்களது விடாமுயற்சியும் ஆலய நிருவாகத்தினரின் ஒற்றுமையும், பக்த அடியார்களின் பங்களிப்பும் உறுதுணையாக இருந்துள்ளன என்றால் மிகையாகாது.

எமது சைவ நெறி மேன்மைகொள்ள திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தவரோ அது போன்று எமது இத்தியடிஸ்ரீ நடனமுத்துமாரியம்மன் ஆலய எழுச்சியில் தலைவர் சம்மந்தன் அவர்களின் பங்கும் அளப்பரியது. தலைவர் என்பது மட்டுமல்லாது அவர் இவ்வாலய வளர்ச்சியில் அவரது காலத்தில் பொருளாளர் பதவியிலும் தன்னை ஈடுபடுத்தி பணியாற்றியவர் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.


சம்மந்தன் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக அம்பாளுக்கு கெளரிகாப்பு ஞாபகார்த்த மண்டபம் (கெளரிகாப்பு மண்டபம்), அமையப்பெற்றது. அதற்கு துணையாக அப்போதைய பொருளாளர் இராசலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தலைவர் கும்பாபிஷேக பிரதம குருவிற்கு
பொன்னாடை போர்த்தி கௌரவித்தல்


மூலஸ்தான தூபிக்கு அபிஷேகம் செய்தல்


திரவிய ஹோமத்திற்கான
ஆயத்தங்களும் தானியங்களும்


மூலஸ்தானத்தில்
குருமார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தற்போது உயிருடன் இல்லை) அவர்களும், கப்பல் கந்தசாமியும் சம்மந்தன் அவர்களுடன் சேர்ந்து முழுமூச்சுடன் இவ்வாலயப்பணியினை மேற்கொண்டார்கள்.

அப்போது கௌரிகாப்பு மண்டப எழுச்சியானது விசேட திருவிழாக்கள், பூசைகள் என்பன சிறப்புற நடைபெறுவதற்கு வழிசமைத்துக்கொடுத்தது என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இங்கு சிறப்பான விடயம் என்னவெனில் ஆலய நிர்வாக அங்கத்தவர்கள் வருடாவருடம் நடைபெறும் நிர்வாக சபைக் கூட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டாலும் ஆலய நிர்வாகத் தலைவராகப் பதவி ஏற்று திரு. சம்மந்தன் அவர்கள் 1999 - 2015 தற்போது வரை கடமையாற்றிக் கொண்டு இருப்பது குறிப்பிட்டுக் கொள்ள வேண்டிய விடயம் ஆகும்.

சம்மந்தன் அவர்கள் நிருவகித்துக் கொண்டு இருக்கின்ற காலத்திலேயே ஆலய பூசகர்கள் (முன்னைய தற்போதைய) குருக்கள் பட்டத்தினை இவ்வாலயத்திலே பெற்றமையும் குறிப்பிட்டுக் கொள்ளத்தக்கது.

2008இல் இடப்பெயர்வின் போது இவ்வாலய எழுந்தருளி விக்கிரகம் சுதந்திரபுரத்தில் தற்போதைய ஆலயக்குருக்கள் "உமாசங்கர்" அவர்களால் பத்திரமாக வைத்து பின்பு மீண்டும் இவ்வாலயத்தில் எழுந்தருளச் செய்துள்ளமை இங்கு சிறப்பான விடயம் ஆகும்.

அதாவது இவ்வாலய விக்கிரகம் வைக்கப்பட்ட இடத்திற்கு இராணுவத்தினரின் உதவி பெறப்பட்டு கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயத்தின் விக்கிரகங்கள் பார்ப்பதற்காகச் சென்ற போது இவ்வாலயத்தின் விக்கிரமும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. சம்மந்தன் அவர்களால் புதிதாக கொள்வனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட உழவு இயந்திரம் இவ்ஆலய தேவைக்காகவே முதன்முதலாக பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பின்பு ஆலயத்தின் விக்கிரகம் மற்றும் ஏனைய பொருட்களும் வைத்த இடத்திலேயே இருந்தமையும் அறியப்பட்டு மீண்டும் இங்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிட்டுக் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் மீள்குடியேற்றத்தின் பின்பு தற்போதைய ஆலய குருக்கள் அவர்கள் மீண்டும் ஸ்கந்தபுரம் பகுதிக்கு வந்து, ஆலய நிர்வாகத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக குடிசையில் குடியிருந்து ஆலயத்தை மீண்டும் எழுச்சி பெறச் செய்வதற்குத் துணை புரிந்தவர் என்பது இங்கு கோடிட்டுக்காட்ட வேண்டிய விடயமாகும்.

அதாவது 2010ம் ஆண்டு காலப் பகுதியில் சம்மந்தன் மற்றும் தற்போதைய ஆலயக்குருக்கள் ஆகியோர் மீண்டும் அம்மன் ஆலய விக்கிரகத்தைக் கொண்டு வருவதற்கு அயராத முயற்சி செய்து அம்பாளின் அநுக்கிரகத்தால் ஆலயக்குருக்கள் திரு.சிவஸ்ரீ உமாசங்கர் அவர்கள் மோட்டார் சைக்கிளில் (உந்துருளி) சென்று அம்பாள் விக்கிரகத்தை மீண்டும் இவ்வாலயத்துக்கு கொண்டு வந்து சேர்த்த பெருமை அவரையே சாரும்.

இங்கு முக்கியமான விடயமாக எழுத்தாளராகிய என்னால் நான் முன்வைக்கப்படும் விடயம் யாதெனில் ஆலய அம்பாளுக்குச் சொந்தமான தங்கநகை நாலரைப் பவுண்கள் இடப்பெயர்வின் போது திரு. சம்மந்தன் அவர்களால் பொறுப்பேற்கப் பட்டு பின்பு அதனைப் பாதுகாத்து அதன் தற்போதைய பெறுமதிக்கேற்றவாறு கணக்கிடப்பட்டு மீண்டும் ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைத்த பெருமையும் சிறப்பும் திரு.சம்மந்தன் அவர்களையே சாரும். (பெறுமதி ஒன்பது இலட்சத்து ஐயாயிரம் ஆரம்ப வைப்பு உள்ளடங்கலாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபஸ்தாபனத்தின் போது சுமங்கலிப் பெண்கள்



கும்பாபிஷேக தினத்தில் குருமார்கள் வீதிவலம் வருதல்




கும்பாபிஷேகத்துக்காக ஏற்றப்பட்ட
கொடியில் வணக்க வழிபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இன்று இவ்அம்மன் ஆலயம் இவ்வாறு பிரமாண்டமாக எழுச்சி பெறுவதற்கு சம்மந்தன் அவர்களது பெருமுயற்சியும் விருப்பமும் அடியார்களது ஒற்றுமையும் ஒருங்கே அமைந்து பிரமாண்டமான எழுச்சிக்கு காரணமாக அமைந்துள்ளன எனலாம்.

இன்று இவ்வாலய எழுச்சிக்கு சம்மந்தன் அவர்களுடன் மோகனா அக்கா குடும்பம், தற்போதைய செயலாளர் தவபாக்கியநாதன் பொருளாளர் லிங்கேஸ்வரன் ஆகியோர் சம்மந்தன் அவர்களது சிந்தனைகள், செயற்பாடுகளுக்கு உறுதுணையாய் நின்று அதனைத் திறம்படநடாத்துவதற்கு தங்களை ஆலயத்திருப்பணிக்காக அர்ப்பணித்து செயற்பட்டனர் என்பதும் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டிய விடயமாகும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கு இணங்க இவர்களது சேவை பாராட்டப்பட வேண்டியது.

இப்புதிய ஆலய மூலஸ்தானக் கட்டட வேலைகள் ஆரம்பிப்பதற்கு இத்தி மரத்தின் கொப்புகள் இடையூறாக இருக்கின்றன என்று எண்ணி அதனை அகற்றுவதற்கு பயத்தின் காரணமாக தயக்கம் கொண்ட வேளை மறுநாள் காலை அகற்றப்பட வேண்டிய அத்தனை கெப்புகளும் தானாகவே முறிந்து எந்தவித இடையூறும் இன்றிக் காணப்பட்டமை அம்பாளின் அருளே ஆகும்.

மேலும் அத்திவாரம் வெட்டுவதற்கான திசைகள் இடங்கள் என்பன நிலத்தடியில் தானாகவே இத்திமர வேர்களால் சுட்டி உணர்த்தப்பட்டிருந்தமையும் அம்பாளின் ஓர் அருட்கடாட்சம் ஆகும்.

ஆலய நிர்வாக சபை கூடி 2013ம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு இன்று இவ்வாலயம் புதிய ஆலயமாக எழுச்சி பெற்று அம்பாள் எமக்கு எல்லா வல்லமைகளையும் தரும் வண்ணம் காட்சி கொடுத்து அமர்ந்திருக்கிறார் என்றார் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூர்த்தி சிறப்பு

இக்கோயிலில் அம்மன் மூல மூர்த்தியாக வீற்றிருக்கின்றார். மூலமூர்த்தியாய் வீற்றிருக்கும் அம்மன் நடனமுத்துமாரியம்மன் ஆகும். இத்திமரத்தடியில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பதால் இத்தியடி ஸ்ரீ நடனமுத்துமாரி அம்மன் என்றே இன்று வரை ஊர் மக்கள் வழிபட்டு வருகின்றனர். பொதுவாக எல்லோரும் இத்தியடி அம்மன் என்றே அழைத்து வழிபடுகின்றனர்.

இத்தியடி அம்மன் அடியவர்களுக்கு வேண்டும் வரம் கொடுக்கும் அம்பாளாக்காட்சி தருகின்றார். வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரும் இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரியம்மன் பக்த கோடிப் பெருமக்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் ஆலயமாக இன்று விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் சிறப்பினை உணர்ந்த அளவையூர் வினாசித்தம்பி அவர்கள் தனது வெண்பாவிலே "ஞானக் கொழுந்தே நடனமுத்துமாரியே தானம் உயர் ஸ்கந்தபுரம்..." எனப் பாடியமை இங்கு நோக்கத்தக்கது.

இத்தியடி அம்மன் ஆலய சிறப்பைக் காட்டும் ஓர் நிகழ்வாக 1993லிருந்து இன்று வரை ஸ்கந்தபுரம் முருகன் ஆலய கொடிச்சீலையானது திருவிழாக்கால ஏற்பாடாக அல்லது கொடியேற்ற முன்பு இத்தியடி அம்மன் ஆலயத்தில் வைத்து பூசைகள் மேற்கொண்ட பின்பு மங்கள வாத்தியங்கள் முழங்க அடியார்கள் புடைசூழ முருகன் ஆலயத்திற்கு கொண்டு சென்று பின்பு கொடியேற்றல் நிகழ்வு இடம்பெறுவதும் இங்கு சிறப்பான விடயம் ஆகும்.

"இத்திமரத்தின் கெப்புகள் இயற்கையாகவே முறிந்து இடையூறு ஏதும் இன்றிக் காணப்பட்டமையும் சிறப்பு வாய்ந்த விடயம். இதனை ஆலய புதிய வரலாற்றில் விரிவாக எழுதியுள்ளேன்."

இவ்வாறு பல அரிய நிகழ்வுகள் இத்தியடி அம்மனின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரதம குருவுடன் ஏனைய குருமார்களை அழைத்து வருதல்


குருமார்களுடன் அடியார்கள் வீதி வலம் வருதல்


பிரதான கும்பம் கோயில் வாசலை வந்தடைதல்



தீபாரதனையின் போது




குருமார்கள் காப்பு கட்டுதல்




கும்பாபிஷேக நிகழ்வின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலச்சிறப்பு

தொன்று தொட்டு ஸ்கந்தபுரம் பல இயற்கை வளங்களால் செழிப்புற்ற ஒரு பிரதேசமாகும். அதனால் இத்தியடி அம்மன் நீர்வளம், நிலவளம் பொருந்திய தலமாக விளங்குகின்றது.

"நெல் மணி ஆடிட காற்றில் சிரிப்பாய் ஸ்கந்தபுரத்தெழில் சொல்லும் தமிழே...." என இத்தலச் சிறப்பை அருட்கவிஞர் தி.ச.ஞானச்சந்திரன் அவர்கள் பாடியுள்ளார். இவை இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரி அம்மன் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் இணைப்பு நகரங்களாகவே அக்கராயன், ஸ்கந்தபுரம் போன்றன விளங்கி வருகின்றன.

முழங்காவில், வன்னேரி, ஆனைவிழுந்தான், முட்கொம்பன், நஞ்சுண்டங்காடு, கண்ணகைபுரம், மணியங்குளம், கோணாவில், அக்கராயன் ஆகிய பிரதேசங்களின் மத்திய நிலையமாக ஸ்கந்தபுரம் விளங்குவதும் அதனூடே பல போக்குவரத்து வசதிகளை கிளிநொச்சிக்கு இட்டுச் செல்வதும் இப்பிரதேசத்தினூடே ஆகும்.

ஆலய உட்புறச் சூழலானது அழகிய இத்தி மரத்தால் சூழப் பெற்று நிழலாகக்காட்சி தருகின்றது. இந்துசமய கலாச்சார அமைச்சால் பதிவு பெற்றும் நிதிப்பங்கீடு பெற்றும் இவ்வாலயம் வளர்ச்சி பெறுவதும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

இல -01 பாடசாலையருகே அமைந்து பாடசாலை விழாக்கள் நிகழ்வுகள் என்பன ஆலயத்தில் தொடக்கிய பின்பே பாடசாலையில் கொண்டாடப்படுவதும் போற்றுதற் குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய அமைப்பு முறை

பிரதான மூலமூர்த்தியாக வீற்றிருக்கும் அம்மன் தெற்கு நோக்கி அமர்ந்து அருள்பாலிக்கின்றார். கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம் போன்ற மண்டபங்களுடன் அமையப் பெற்றுள்ளது.

பிள்ளையார், முருகன், சிவன் போன்ற சன்னிதானங்களும் உண்டு. மூலமூர்த்தியாகிய அம்பாளின் கருவறைக்குப்பின் பக்கமாக அழகிய சிறிய கோபுர வடிவிலே அமைந்த சிற்பங்கள் உண்டு. நாலா பக்கமும் அம்பாளின் உருவம் அமைந்த முகப்பு உண்டு. நாலா பக்கமும் அம்பாளின் உருவம் அழகிய சிற்ப வேலைபாடுகள் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது.

பெருமதிலால் சூழப்பெற்று பாதுகாப்பாக பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் நிறப்பூச்சுக்களால் அழகிய வேலைப்பாடுகள் அமையப் பெற்றுள்ளது. சிறிய மணிக்கோபுரம் அதாவது “கோபுரதரிசனம் கோடி புண்ணியம்” என்பதற்கு இணங்க அமையப் பெற்றுள்ளமை சிறப்பான விடயம் ஆகும்.

மடைப்பள்ளி, அந்தணர் விடுதி, உள்வீதி, வெளிவீதி போன்ற சிறப்பம்சங்கள் பொருந்தியதாக ஆலய அமைப்புமுறை விளங்குகின்றது.

அபிராமி சிற்பாலயத்தின் (விக்னேஸ்வரன்) அழகிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்டு சிற்பங்கள், விக்கிரகங்கள் ஆக்கப்பட்டமையும் ஓர் சிறப்பான விடயம் ஆகும்.

வசந்த மண்டபத்திலே சரஸ்வதி, துர்க்கை, இலக்குமி ஆகிய தெய்வங்களது சிற்பங்கள் தத்துருபமாக அல்லது தத்துவார்த்தமாகச் செதுக்கப்பட்டுள்ளன. நாகதம்பிரான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா சபையில் அழகிய தோற்றம்



நாகதம்பிரான். வைரவர் சந்நிதானம்

பிரதான கும்பங்கள் யாகசாலையிலிருந்த புறப்படுதல்



கும்பங்கள் வீதியுலா வருதல்





கும்பங்கள் வீதியுலா வருதல்



மங்கள வாத்திய நிகழ்வுகள்



தலைவர் அவர்களுக்கு கும்பாபிஷேக பிரதமகுரு "இறைபணி செம்மல்" எனும் கௌரவ பட்டம் வழங்கி கௌரவித்தல்



சிம்மம். பலிபீடம். தம்பவிநாயகர் அபிஷேகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் ஆகிய சன்னிதானங்கள் ஒருசேர அமர்ந்து அருள்பாலிப்பதும் சிறப்பம்சமாகும்.

அம்பாளுக்கு காவல் காக்கும் தோரணையில் இரு மருங்கிலும் காவல் பெண்டிர் அதாவது துவாரகபாலகிகள் வீற்றிருப்பதும், வசந்த மண்டபத்திலேயும் அத்தகைய வடிவங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் நாம் சிறப்பான வடிவமாக எடுத்துக் கொள்ளலாம்.

தூண்கள் அழகிய வேலைப்பாடுகள் கொண்டும் கருவறை வெளிச்சுவர், உட்சுவர்களிலே கண்கவர் சிற்ப ஓவிய வேலைப்பாடுகள் என்பன பார்பவர்கள் கண்களுக்கு விருந்தளிப்பதாக உள்ளன.

மோகனா அக்கா குடும்பத்தார்க்கு இப்பிரதேச அம்பாள் அடியார்கள் சார்பாக எழுத்தாளன் ஆகிய என்னால் சீர்மிகு சிறப்புக்கள் உண்டாகும் வண்ணம் அம்பாளின் அருட்கடாட்சமும் சகல சௌபாக்கியங்களும் உண்டாகும் வண்ணம் வேண்டுகின்றேன். ஆலயத்திற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டபோது தமது சொந்த நிலத்தை ஆலயத்திற்கு வாரி வழங்கியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசைகள் விழாக்கள்

இவ்வாலயம் மடாலயமாக இருந்த போது பூசைகள் விழாக்கள் எனும் வகையில் ஆரம்பத்தில் காலை மாலைப்பூசைகள் விளக்கு ஏற்றி வழிபாடாற்றுவதாக இருந்து வந்துள்ளது பின்பு படிப்படியாக காலை மாலைப்பூசைகள் இடம் பெற்றன. (சைவம் என்று அழைக்கப்பட்டவரே ஆரம்பத்தில் காலை மாலை பூசைகளை மேற்கொண்டார் என ஆரம்ப கட்ட வரலாறுகளிலிருந்து அறிய முடிகிறது.)

தை மாதத்தில் தைப்பொங்கல் மாசி மாதத்தில் சிவராத்திரி கிளிநொச்சி இடப்பெயர்வின்போது நான்கு சாமப்பூசைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. அத்தோடு கலாபூசணம் செல்வராணி சோமசேகரம்பிள்ளை அவர்களாலும் மற்றும் ஆனந்தவாரியார் போன்றவர்களால் பிரசங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

பங்குனித்திங்கள், பங்குனி உத்தரம், சித்திரைப்பூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், வரலட்சுமிவிரதம், நவராத்திரி விழா , கௌரிவிரதம், கார்த்திகை விளக்கீடு, மார்கழித்திருவெம்பாவை என்பன பூசைகள் விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

பங்குனி உத்தரத்தினைத் தீர்த்தநாளாகக் கொண்டு தற்போது இவ்வாலயம் பத்து நாள் உற்சவமாகக் கொண்டாடப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடவேண்டிய விடயம் ஆகும். தற்போது மண்டலாபிசேகப் பூசைகள் தினமும் காலை மாலை நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. மண்டலாபிசேக பதினைந்து நாட்களில் அன்னதான நிகழ்வு ஒவ்வொரு நாளும் நடைபெற்றுக்கொண்டு இருப்பதும் சிறப்பான விடயம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் சக்தி ஆலயமாக இருந்தாலும் சிவனுக்குரிய பூசைகள், விழாக்களும் சிறப்புற நடைபெறுவதும் சிறப்பாகும். அதாவது "சிவசக்தி கோட்பாடு" இங்கு போற்றப்படுவதும் குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

## ஆலய நிர்வாக சபை

1982 ல் இவ்வாலய நிர்வாகசபை கூடிய போதும் ஆரம்பத்தில் திரு. சி. கந்தசாமி அவர்கள் தலைவராக இருந்து செயற்பட்டார்.

அதாவது வருடா வருடம் நடைபெறும் பொதுக்கூட்டத்தின் மூலம் இவ்வாலய நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அதிலே தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோர் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்படுவார்கள். 1982 இல் இவ்வாலய நிர்வாகசபை கூடியுள்ளது. அதன் செயற்பாடுகள் சி. கந்தசாமி தலைமையில் இடம் பெற்றுள்ளன.

1982 தொடக்கம் 1997 களின் பிற்பகுதி வரைக்கும் தலைவர் சி. கந்தசாமி அவர்களின் தலைமை இவ்வாலய ஆரம்பகால வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாகவும் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து விமலேஸ்வரன் அவர்கள் பொதுக்கூட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டார். இவரது காலத்தில் ஆலயத்திற்கான நிலம் பெறப்பட்டது. அந்தணர் விடுதி, வசந்தமண்டபம், மணிக்கோபுரத்தின் எழுச்சி, ஆலயத்திற்கான வங்கிக்கணக்கு போன்ற வசதிகள் ஏற்படக் காரணமாக இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இங்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டிய விடயம் யாதெனில் ஆலயத்திற்கான நிலம் பெற்றமை அதாவது மோகனா அக்கா குடும்பம் ( தங்கராசா சிவபாக்கியம்) தமது சொந்த நிலத்தை ஆலயத்தின் தேவைக்காக வழங்கியிருக்கிறார்கள். அப்போதைய ஆலய நிர்வாகத்தினர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அக்குடும்பத்தார்க்கு ஆலய நிரந்தர அங்கத்துவத்தினை வழங்கியிருக்கிறார்கள். இவ்விடயம் கி. மகேந்திரன் கிராமசேவகர் முன்னிலையில் இடம்பெற்றமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இத்தகைய சிறப்பான விடயங்கள் விமலேஸ்வரன் அவர்கள் ஆலய நிர்வாகத் தலைவராக இருந்தகாலத்தில் இடம்பெற்றன.

அதன் பின்பு 1999 - 2015 தற்போது வரை இவ் ஆலயத்தின் தலைவராக திரு . பொன் திருஞானசம்மந்தன் அவர்களின் தலைமையில் இவ்வாலயம் பெருவளர்ச்சி கண்டு வருவது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

அதாவது இவரது காலத்தில் அவரது அயராத முயற்சியின் பயனாக அம்பாளுக்கு கௌரிகாப்பு மண்டபம் அமையப்பெற்றது. இங்கு சிறப்பான விடயம் யாதெனில் ஆலய நிர்வாகசபைக் கூட்டம் வருடா வருடம் நடைபெறுவதும் அதன் தலைவராக திரு. பொான். சம்மந்தன் அவர்கள் அன்று தொடக்கம் இன்று வரை (1999 - 2015) கடமையாற்றிக் கொண்டு இருப்பதும் சிறப்பாகும்.

இவருடைய நிர்வாகத் திறமைக்கு தற்போதைய ஆலயத்தின் பிரமாண்டமான எழுச்சியே சான்றாகும். ஒரு தலைமைத்துவம் ஒழுங்காக இருந்தால் அதன் செயற்பாடுகள் அனைத்தும் ஒழுங்காக இருக்கும். இதற்கு சம்மந்தன் அவர்களது தலைமையில் இத்தியடி அம்மன் ஆலயத்தின் வளர்ச்சி ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவருடைய நிர்வாகத் தலைமையில் மேலும் பல வளர்ச்சிகள் இத்தியடி அருள்மிகு ஸ்ரீ நடன முத்துமாரி அம்மனுக்கு ஏற்பட அம்பாள் அருள்புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.பொன்.ஞானசம்மந்தன் அவர்கள் பாடசாலைக்கு நீர்க்குழாய் மூலம் குடிதண்ணீர் வசதி பெற்றுக் கொடுத்துள்ளார் என்றும் தற்போதைய ஆலயக் குருக்களும் அத்தகைய வசதியை பெறுவதற்கு தனது பங்கையும் மேற்கொண்டார். இவை மோகனா அக்காவின் மனவிருப்போடும் அவர்களது வீட்டிலிருந்தே தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டமையும் அறியமுடிகின்றது.

இவ்வாலயம் அமைப்பதற்கான அளவைப் பிரமாணங்கள் பாபுக்குருக்கள் அவர்களால் மேற்கொள்ளப்பட்டமை எடுத்துக் கூறக்கூடிய ஒன்றாகும். சம்மந்தன் அவர்களது ஆலயத் திருத்தொண்டை சிறப்பிக்கும் முகமாக அவருக்கு “இறைபணி செம்மல்” எனும் பட்டம் குருக்கள்மார் முன்னிலையில் பாபுக்குருக்கள் அவர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய விடயம் ஆகும்.



ஆரம்ப காலத்தில் இவ்வாலய நிகழ்வுகளின் போது பண்ணிசை மேற்கொண்டதற்கான ஒரு நினைவுப்பதிவேடு..... (இடப்பெயர்வுக்கு முன்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தியடி அம்மன் தனது அடியார்களுக்கு காட்சி கொடுத்த விதம் அல்லது அருளளித்த விதம்

ஐஸ்ரின் என்ற கிறிஸ்தவ மதத்தைச்சார்ந்த நபரொருவருர் ஆலயச்சூழலில் அமைந்துள்ள வாய்க்காலை துப்பரவு செய்து கொண்டு இருந்த போது, பொழுது சாய்ந்து மாலை வேளையானது இரவு வானத்துச்சந்திரன் வானத்தை அழகுபடுத்த ஆரம்பித்த அந்த கணப்பொழுதில் " ஒரு பெரிய பெண் உருவம் நீண்டு உயர்ந்து வளர்ந்து நீண்ட வெண்தலை முடி (நரை) யுடன் அவருக்கு காட்சி கொடுத்ததாக பெரியவர்கள் சிலரிடம் கூறியுள்ளார். அம்மன் காட்சியளித்த அந்த இடத்தில் 1 1/2 அடி நீளமுள்ள கால் தடம் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறுமி ஒருத்தி மோகனா அக்காவின் தாயார் ஆலய விளக்குகளை வழமைக்கு மாறாக குறிப்பிட்ட நேரத்துக்கு முதலிலேயே ஏற்றிவிட்டாரா? என்று ஆலய விளக்குகள் எரிந்து கொண்டு இருப்பதைப் பார்த்து மோகனா அக்காவிடம் வினாவிய போது மோகனா அக்கா கூறியதாவது, தாயார் உள்ளே கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறார். அப்போது சென்று பார்த்த போது ஆலயவிளக்குகள் எரிந்து கொண்டிருந்துள்ளன.

ஆலயச்சூழலுக்கு மிகவும் நெருக்கமான இடத்தில் வயது முதிர்ந்த ஒருவர் மதுபோதை வியாபாரம் செய்ய எத்தனித்த வேளை " சர்ப்பம் தீண்டி உயிர்தப்பியமையும் " அம்பாள் அடியார்களுக்கு காட்சி கொடுத்து, ஆலயச் சூழலில் எந்தவித கெடுதல்களும் நிகழாது காத்து வருகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அம்மன் அடியவர்களுக்கு அருள் பாலித்துள்ளமையால் இன்றும் இத்தியடி அம்மன் புகழ் பூத்து வளம் பெருகிக் கொண்டு இருக்கும்' ஓர் புதுமையான ஆலயமாக விளங்குகின்றது.

இவ்வாலயம் பிரதான வீதியோரத்தில் அமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றார். வீதி அமைக்கும் போது அம்மனுக்கு குறுக்கே அல்லது கிழக்காக அமைக்கத்திட்டம் மேற்கொண்ட போது அதற்கு அம்பாள் இடம் கொடுக்காததால் தற்போது அமைந்தவாறு மேற்கே அமைக்கவேண்டிய நிலைக்கு அப்போதைய வீதித் திருத்தவேலை மேற்கொண்டவர்கள் உள்ளாக்கப்பட்டமையும் அம்பாளின் அருளே.



வவுனியா வெளிவட்ட வீதி, சிந்தாமணி விநாயகர் தல வரலாறு எழுதி வெளியிட்ட போது ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் கந்தசாமி அவர்கள் இத்தியடி அம்மன் ஆலயத் திருப்பணியில் சிறப்பித்துக் கொள்ளக் கூடிய வரும், சம்மந்தன் அவர்களை இவ்வாலயத் திருப்பணிக்குள் உட்படுத்திய பெருமையும் கந்தசாமி அவர்களையே சாரும்.

இல -01 பாடசாலைக்கும் இவ்வாலயத்துக்குமான தொடர்பு பற்றி பாடசாலை அதிபர் திருமதி.வி. விமலேஸ்வரன் குறிப்பிடுகையில் பாடசாலையில் இடம்பெறும் சமய விழாக்கள், கொண்டாட்டங்கள், வெள்ளிக்கிழமை நிகழ்வுகள் என்பன ஆலயத்தில் ஆரம்பித்த பின்பே மாணவர்கள் ஆசிரியர்கள் பாடசாலையில் அனுஷ்டிப்பது வழமையான செயற்பாடாகும்.

கிட்டத்தட்ட பத்து வருடங்களாக திருமதி. விமலேஸ்வரன் அவர்கள் இல -01 பாடசாலையின் அதிபராக இருந்து இவ்வாலயத் தொண்டுகள், பூசைகள் விழாக்களுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்களின் பங்களிப்பு என்பவற்றால் பங்களிப்பு நல்கி வருகின்றார் என்றும் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக தினத்தில் மாலை ஆரம்பிக்கப்பட்ட பஜனை நிகழ்வில் கலந்து கொண்டோர்கள்



நவக்கிரக ஹோமம்நடைபெற்ற தினத்தில் வழிபாடுகளில் கலந்து கொண்ட அடியார்கள்



ஸ்கந்தபுரம் முருகன் கோயிலில் வழிபாடுகளை நடாத்தும் போது முருகன் கோயில் பூசகரை கௌரவித்தல்



கங்காபூசை நடாத்தி கலசத்தில்தீர்த்தம் எடுத்தல்



கும்பாபிஷேக கிரியைகளின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தியடி அம்மனுக்கு திரு. ஞானசந்திரன் அவர்களால் அருளிச்செய்யப்பட்ட பாடல்கள்

தொட்டியடி அருகமர்ந்த
இத்தியடி அம்மனுக்கே
தொண்டுகளை தினம்புரிந்தால்
வெற்றியுண்டு எங்களுக்கே
பக்தியுடன் பத்திகளை
ஏற்றித்தொழு அம்மனையே
நெற்றி வரும் குங்குமமே
நேர்த்தி தரும் மங்களமே

( தொட்டியடி ......

தென்னை நடனங்கள் வளவினிலே
நெல்லின் ஜனனங்கள் வயலினிலே
புல்வெளி பசுமைகள் பசுக்களுக்கே
பாலினின் அபிஷேகம் அம்மனுக்கே

( தொட்டியடி .....

மேட்டு பயிர்களின் விளைச்சலிலே
கூட்டும் தனம்களும் கைகளிலே
கூத்தும் பாக்களும் கோயிலிலே - வழி
காட்டும் அம்மனின் வாசலிலே

( தொட்டியடி .....

கல்வியின் சாதனை உயர்வினிலே
செவ்வென வியாபாரம் உச்சத்திலே
செவ்விதழ் மனதிலே விரிகிறதே
அவ்விடம் அம்மன் அமர்வதற்கே......

( தொட்டியடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகமாயி சிவகாமி குங்குமக்காரி
அருள்வாரி தினம்தோறும்
பொழிவாயே மாரி
பிறைசூடி சிவனாரின்
துணையானதேவி
பிரியாத உறவான உத்தம தாயி

குடையான இத்திமரமே கொடையான சக்திவரமே
நடையாக சுற்றிவரவே படையாக பக்தி வருமே
அணையாத வெற்றிச்சுடரே அழியாத நித்த ஒளியே
அலையாக இன்பம் எழவே துணையாகும்
இத்திவிழுதே.

( குடையான.........

பாலனின் கையிலே வேலைக் கொடுத்தாய்
பகைவெல்ல நெஞ்சிலே வீரம் நிறைத்தாய்
கத்திபோல் வேப்பிலை கரத்தில் எடுத்தாய்
சக்தியாய் என்னுள்ளே புத்தி அளித்தாய்
பக்தியாய் பாடுவேன் நித்தம் உன்னையே
யுத்தியாய் வாழவே எண்ணம் இழைத்தாயே

( குடையான.....

இத்தியின் கீழ் இரு இல்லம் உனக்காய்
மத்திய ஊரினில் மஞ்சள் தெறிப்பாய்
நேத்திகள் வைத்திட பூர்த்தி அளிப்பாய்
நெல்மணி ஆடிட காற்றில் சிரிப்பாய்
ஸ்கந்தபுரத்தெழில் சொல்லும் தமிழே
தங்க நிறத்தினில் மின்னல் மொழியே.

( குடையான......

இத்தியடி அம்மனுக்கு
ஏற்றுங்கடி நெய்விளக்கு
எலுமிச்சம் பாதியிலே
செய்து வைச்ச பொன் விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி வந்து நீ தொழுது
தூண்டிவிடு மணி விளக்கு
எப்பொழுதும் ஒளி விளக்கு
அம்மன் என்று நீ விளக்கு

( இத்தியடி...

திங்கள் முழு நாளுமடி
தேவி பூ வாசமடி
தேசமெங்கும் வீசுமடி
துன்பம் தொலைவாகுமடி
தேடி வா வாசல்படி
தேடும் வரம் சொன்னபடி

( தொட்டியடி...

பூரம் வரும் ஆடியடி
புதுப்பாட்டு கொண்டாடி
பூப்பெய்தாள் அம்மாடி
புன்னகைக்கும் பூ ஆடி
தாயன்பாய் மனம் கூடி
சேருமிங்கே தேனோடி

( தொட்டியடி...

உன் மனச வெள்ளையடி
அம்மன் குடி கொள்ளயடி
அன்புக்கெல்லை இல்லயடி
அவள் காவல் எல்லயடி
அத்தனைக்கும் இத்தியடி
ஆனந்தத்தின் சொர்க்கமடி

( தொட்டியடி....

கிளிநொச்சி வரைவினில்
எழில் பெறும் ஊரே
தொழில்களில் சிறந்திட்ட
தனிப் பெரும் பேரே
புலியுடை சடையனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை வாழும் வீடே
புலம் வந்து குடியமர்
தினம் தினம் தேரே

( கிளிநகர்...

வந்தவரை வரவேற்கும்
கந்தபுரப் பூமியிலே
தங்கும் குறை ஏதுமில்லை
தங்கவயல் ஊருனிலே
எவ்வினையும் தீரும் இந்த
இத்தியடி நிழலினிலே
வந்தமர்வாய் துன்பமில்லை
நந்தவன சோலையிலே

( கிளிநகர்...

தொன்றுதொட்டு வாழ்ந்துவரும்
தெங்கு நிறை மண்ணினிலே
தென்றலென வீசி வரும்
அம்மன் அருள் காவலிலே
என்றும் ஒரு அச்சமில்லை
எங்கள் குல வாழ்வினிலே
நம்பி வரம் கேட்டுவிடு
வெம்பி அழத் தேவையில்லை.

( கிளிநகர்.....

நித்திய பூஜை வந்து
நிரலில் நானும் நின்றதில்லை
சத்தியமா வெள்ளி செவ்வாய்
விரதம் இருந்ததில்லை
அன்றொருநாள் வாசல் வந்து
அன்போடு பொங்கல் வைச்சேன்
அன்றுமுதல் ஆனந்தமே
நெஞ்சோடு பொங்கக் கண்டேன்

( நித்திய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமாலை சூடவில்லை
பாமாலை பாடவில்லை
மாலையில தேடவில்லை
மணிவந்து அடிச்சதில்லை
மண்ணெடுத்து பொட்டு வைச்சேன்
மலரா நான் பூத்திருக்கேன்

( நித்திய...

காணிக்கை இட்டதில்லை
கற்பூரம் ஏற்றவில்லை
அர்ச்சனை செய்யவில்லை
ஆலயம் சுற்றவில்லை
அம்மனையே நினைச்சிருக்கேன்
அதனால் செல்வம் நிறைஞ்சிருக்கேன்

( நித்திய...

**புதிய ஆலய வளர்ச்சியின் கட்டட வேலைகளுக்கான சீமெந்து முதலிய பொருட்களை நீண்டகாலக் கடனின் அடிப்படையில் ஆலயத்திற்கு வழங்கி உதவிய அமுதக் கடல் உரிமையாளர்கள் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்கள் என ஆலய நிர்வாக சபைத் தலைவர் சம்மந்தன் பெருமை கொண்டார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரம்ப கால வரலாற்றுப் பதிவுகளாக திரு. சி. கந்தசாமி அவர்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்ேேட்டிலிருந்து ....**

ஆரம்ப காலத்தில் மூலமண்டபத்தை கட்டுவதற்காக திரு. சி. பசுபதிப்பிள்ளை, திரு. இரத்தினசபாபதி, திரு. சிவப்பிரகாசம், திரு. கந்தையா, வீ. கந்தையா தம்பிப்பிள்ளை இன்னும் பலரின் உதவியோடும் பக்த அம்பாள் அடியார்களின் ஒத்துழைப்போடும் மூல மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது.

மூலஸ்தானத்தில் அம்மன் சிலையை வைப்பதற்காக, திரு. சி.கந்தசாமி ஆனந்தவாரியார் இருவரும் வவுனியா சென்று பெற்று வந்து அம்மன் சிலையை கட்டுவனிலிருந்து கணேஸ் (கனகசபை) என்பவர் சைவக்குருக்களை அழைத்து வர தங்கராசா, கருணானந்தசிவம் என்பவர்களின் பங்களிப்போடு கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது.

நாளாந்த பூசையினை திரு.செ.கருணானந்தசிவம்(சைவம்) அன்பவரே செய்து வந்தார்.

புரட்டாதி மாத நவராத்திரி பூசையின் போது அம்மன் பவனி சென்று நாகதம்பிரான் ஆலயத்தில் கன்னிவாழை வெட்டி வந்தார்கள் என்றும் அறியப்படுகின்றது.

மூன்றாவது மண்டப வேலைகளுக்கான (தூண்கள் கொண்டு) செ.பூபாலசிங்கம் (மூளாய்) உதவி வழங்கியுள்ளார். அம்மண்டப பகுதிவேலைப்பாடுகளை திரு. சி. சின்னராசா, திரு. செ. கருணானந்தசிவம், திரு.சி. கந்தசாமி கருணாகரன் போன்றோர் மேற்கொண்டு அவ்வேலைகளை முடித்தார்கள் என்றும் அறியப்படுகின்றது.

இவ்வாலயத்திற்கான காண்டாமணியை திரு. ஆனந்தவாரியார் அன்பளிப்புச் செய்ததாக அறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் ஆலயக்கட்டடம், வைரவர் சிலை என்பன பாழினி கடை உரிமையாளர் திரு. இரத்தினம் அவர்கள் மூலம் செய்யப்பட்டது.

மேலும் பிள்ளையார் சிலையை திருமதி. புண்ணியமூர்த்தி சுலோசனாவும் முருகன் சிலையை திரு. சி. கந்தசாமி, கப்பல் கந்தசாமியும் நாகதம்பிரான் சிலையை தங்கராசா ஆகியோரும் அன்பளிப்பாக வழங்கினார் எனவும் பண்டைய வரலாறும் பதிவாக திரு. சி. கந்தசாமி அவர்களது தலைமையில் இடம் பெற்றதாகவும் அறியப்படுகின்றது.

கப்பல் கந்தசாமியின் பணியும் சிறப்பும் இவ்வாலய வரலாற்றோடு பின்னிப் பிணைந்து காணப்படுவதோடு, அவர் உயிருடன் தற்போது இல்லா விட்டாலும் அவரது பணிகள் உயிரோட்டமானவை என தற்காலத்திலும் உணரப்படுகின்றது.

திரு. சி. சின்னராசா அவர்கள் ஆரம்பத்திலிருந்து தற்போது வரை இவ்வாலய பூசைகள் விழாக்களின் போது பண்ணிசை நிகழ்வுகளை மாணவர்கள் மற்றும் அம்பாள் அடியார்களுடன் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஸ்கந்தபுரம் அம்பாள் அடியார்களின் அயராத முயற்சியின் பயனே இவ்வாலயம் சம்மந்தன் அவர்களின் தலைமையில் பெரு வளர்ச்சி கண்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள்**

ஆடையால் உடம்பை மூடிக் கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும் பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.

ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்.
ஒரேமுறை பிரகாரத்தில் வலம் வருதல்
எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல்
நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்.
மயிர் கோதி முடிதல், சூதாடுதல்
பாதரட்சை இட்டுக் கொள்ளுதல்
வீண்வார்த்தை பேசுதல், பொய்பேசுதல்இரைந்துசிரித்தல்
பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்
சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்
அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம் வருதல்.
திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்
காம எண்ணங்கொள்ளல்
கம்பளி ஆடை அணிதல்
இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல். தாம்பூலம் தரித்தல், புகைத்தல்
விக்கிரகத்தை தொடுதல்
தூபி, துவஜஸ்தம்பம் (கொடிமரம்), பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்.
உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்.
வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுகம்புல்

ஆறு இடங்களில் வேர்களை ஊன்றி ஒருகொடி போல வளர்வது அறுகு அல்லது அறுகம்புல் ஆகும்.

இது குளிர்மையானது. கோடை காலத்திலும் வாடாது. இது அரிய மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அறுகம்புல்லை நீரில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் காய்ச்சல் தணியும். அறுகம்புல் உடலின் எடையையும், கொழுப்பையும் குறைக்கும். நரம்பு தளர்ச்சியை நீக்கும். இரத்தப்புற்று நோயைத் தணிக்கும். நஞ்சினை முறிக்கும். இரத்தச் சிவப்பணுக்களைப் பெருக்கும். இருமல் இதயக்கோளாறு, இரத்தச்சோகை முதலிய நோய்களுக்கு சிறந்த மூலிகையாகும். "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர் ஓடி" என்பது போல் உலகம் செழித்து வாழ வேண்டும் என்பதை குறிக்க அறுகம்புல் சிறந்த வழிபாட்டுப் பொருளாக விளங்குகின்றது.

## கும்பத் தத்துவம்

| | | |
|---|---|---|
| குடம் | - | தசை |
| அதனுள் உள்ள நீர் | - | குருதி |
| அதனுள் உள்ள இரத்தினங்கள் | - | எலும்புகள் |
| குடத்தை சுற்றியுள்ள நூல் | - | நாடிகள் |
| செபிக்கப்படும் மந்திரம் | - | உயிர் |
| கூர்ச்சம் | - | தலைமுடி |
| மாவிலை | - | சடை |
| தேங்காய் | - | தலை |
| வஸ்திரம் | - | தோல் என்பவற்றைக் குறிக்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பூர ஆராத்தியின் தத்துவம்**

பூஜை முடிவில் கற்பூர தீபம் காட்டுவது வழக்கம். இறைவனுக்கு கற்பூர ஆராத்தி எடுக்கும் போது எரிந்த பின்பு சாம்பலோ, தூசியோ வேறு எதுவுமே மிச்சம் இருப்பதில்லை. கற்பூரம் தன் வாசனையை ஞானத் தீயில் இட்டு எதுவும் மீதம் இல்லாத நிலையில் தெய்வத்தை அடைகின்றது. கற்பூர தீபம் ஏற்றிக் காட்டுகையில் இறையருள் உலகத்தில் இருக்கும் அது எரிந்து சாம்பலாவது போல ஆண்டவனுடைய ஜோதியில் ஆன்மா கரைந்து ஒன்று பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

**மணி அடிப்பதன் தத்துவம்**

ஆலயத்தில் பூஜையின் போது வெளிப் பிரகாரத்தில் பெரிய மணி (காண்டா மணி) ஒலிக்கும். பூஜை நடைபெறும் போதும் சிவாச்சாரியாரின் இடது கையில் உள்ள மணி ஒலிக்கும். இவை அசுரர்களை நீக்கி தேவர்களை அழைப்பதற்காகவே அடிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கைமணியின் மேற்பகுதியில் | - | இடபம் |
| நாக்கு | - | சரஸ்வதி |
| தண்டு | - | சூரியன் |
| நாதம் | - | ஈஸ்வரன் |
| மணியின் அதிதேவதை | - | வாசுதேவன் |
| நான்கு கால்கள் (பக்கங்கள்) | - | இருக்கு, யசூர், சாமம், அதர்வம் |

| | | | | |
|---|---|---|---|---|
| கர்ப்பக்கிரகம் | - | தலை | - | மூலாதாரம் |
| அர்த்தமண்டபம் | - | முகம் | - | சுவாதிஷ்டானம் |
| மகா மண்டபம் | - | மார்பு | - | மணிபூரகம் |
| ஸ்நபன மண்டபம் | - | வயிறு | - | அநாகதம் |
| அலங்கார மண்டபம் | - | தொடை | - | விசுக்தி |
| சபா மண்டபம் | - | முழங்கால் | - | ஆக்ஞை |

புருவநடு - மகா லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலையுச்சி | - | விமானம் |
| தலை | - | கருவறை |
| நரம்புகள் | - | தூண்கள் |
| எலும்புகள் | - | கற்கள் |
| காதுகள் | - | பகணிகள் |
| வலக்காது | - | தட்சணாமூர்த்தி |
| இடக்காது | - | துர்க்கை சன்னிதி |
| மூக்கு | - | கருவறையின் முன்னுள்ள இருநிலைத் தூண்களில் மேலுள்ள கல். |
| கண்கள் | - | கருவறையின் முன்னுள்ள இருநிலைத் தூண்கள் |
| வாய் | - | கருவறையின் வாசல் |
| கழுத்து | - | வாகன நந்தி |
| கைகள் | - | வெளிப்பிரகாரங்கள் |
| தோள்கள் | - | உட்பிரகாரங்கள் |
| முதுகுத்தண்டு | - | கொடிமரம் |
| கொப்பூழ் | - | பலிபீடம் |
| பாதம் | - | கோபுரம் |

ஆரம்பகால அம்பாள் அடியார் உயர்திரு. கனகசபை அவர்களின் நிதிப்பங்களிப்பு பெருமை சேர்க்கும் விடயமாகும். இவர் தனது சார்பாக ஆசியுரை ஒன்றையும் வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

சி. கந்தசாமி (முன்னைய ஆலய தலைவர்) அவர்களின் செவ்வியிலிருந்தும் குறிப்பேட்டிலிருந்தும்....

திரு. தங்கராசா (மோகனா அக்காவின் தந்தை) அவர்களின் கருத்துப்பகிர்விலிருந்து.....

திரு. இராசையா (ஓய்வு பெற்ற தபால் ஊழியர் முருகன் ஆலய முன்னாள் தலைவர்) அவர்களின் நேர் காணலிலிருந்து சில...

திரு. விமலேஷ்வரன் (முன்னாள் தலைவர் - இத்தியடி அம்மன்) அவர்களின் சிந்தனையிலிருந்து...

திரு. பொன். திருஞான சம்மந்தன் (தற்போதைய ஆலய நிருவாகத் தலைவர்) அவர்களின் பேட்டியிலிருந்து .....

அருட்கவிஞர் அளவையூர் வினாசித்தம்பியின் வெண்பாவிலிருந்து ....
கவிஞர் ஞானச்சந்திரனின் பாடல்களிலிருந்து.....

திரு. சி. சின்னராசா அன்று தொட்டு இன்று வரை இவ்ஆலயத்திற்கு பண்ணிசை (பஜனைகளை மேற்கொள்பவர்) அவர்களின் செவ்வியிலிருந்தும் ஆராய்ந்து அறியப்பட்ட விடயங்கள் காரணமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவருள் நாட்டமுடைய சூரியதாசன் ஆன்ம விசாரமுடையவராக, பக்தி வலையிற்படுவோனாகத் தோற்றம் பெற்றமையினாலேயே தனக்குகந்த துறையில் கால் பதித்து மாணவர்கள் மனதில் அழியா இடம்பெற்றவராகக் காணப்படுகின்றார். அது மாத்திரமன்றி தான் கற்பிக்கும் துறையிற் துறைபோக கற்றுப் பாண்டித்தியம் பெற்று பொருத்தமான பாத்திரமாக தன்னை மாற்றி வருகின்றார்.

ஸ்கந்தபுரம் அருள்மிகு இத்தியடி நடனமுத்துமாரி அம்மனுடைய ஆலய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் ஆய்வு நூலினை எழுதிய சிந்தனைச் செம்மல் சீவரத்தினம் சூரியதாசன் எனது பெருமதிப்பிற்குரியவராவார்.

கலாபூசணம்
திருமதி. செல்வராணி சோமசேகரம்பிள்ளை
சமாதானநீதவான் ,
இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org